கட்சிகளைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் இன்றைக்கு தமிழகத்தின் முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் கரத்தை வலுப்படுத்துகின்ற வகையில், உங்கள் ஆசாபாசங்களை மறந்து, விருப்பு வெறுப்புகளை மறந்து, உங்களுக்கு ஏற்பட்டு இருக்கிற கோபாதாபங்களை மறந்து தமிழக மக்களை காப்பாற்ற வேண்டுமென்ற உணர்வோடு தமிழக அரசு எடுக்கின்ற முடிவுகளுக்கு ஏற்ப, கொண்டுவந்திருக்கிற வரவு-செலவுத் திட்டத்திற்கு அங்கீகாரம் அளித்து, மத்திய சர்க்காரிடம் கேட்கின்ற உரிமையை கொடுக்கின்ற சூழ்நிலையை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று பணிவோடு கேட்டு, விடைபெறுகிறேன்.

*திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையின் மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சில முக்கியமான கருத்துக்களை நான் முன் வைக்க விரும்புகிறேன். அதற்குமுன்னதாக, முதலாவதாக எங்களுடைய கட்சியின் தலைவர் தோழர் சங்கரய்யா அவர்கள், இன்றைக்குக் காலையில் இங்கே ஒன்றைத் தெரிவித்தார்கள். பத்திரிக்கையாளர்களுக்கு ஜனநாயக உரிமைகளை மறுக்கக்கூடிய ஒரு சட்டம், நமது சட்டமன்றத்திலே நிறைவேற்றப்பட்டது. அதை நிறைவேற்றுகிற காலத்திலேயே அதனை நாங்கள் எதிர்த்தோம். ஆயினும் அது சட்ட புத்தகத்திலே ஏறியிருக்கிறது. அதனுடைய விளைவு எப்படியும் இருக்கலாம். இதே போன்று கொடுமையான சட்டத்தின் விளைவு பீகாரிலே எப்படி விளைந்தது என்பதைப் பார்த்தோம். அந்த மாநிலத்தின் மக்கள் கொதித்து எழுந்து, மாநிலமே கொந்தளித்து, அந்தச்சட்டம் செத்தது என்ற நிலைமை ஏற்பட்டது.

7. ஒழுங்குப் பிரச்சினை.

வரவு-செலவுத் திட்டம் விவாதிக்கப் பெறும்போது நிதித்துறை செயலாளர் அதிகாரிகள் மாடத்தில் இல்லாதது.

திரு. துரை முருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு பாயிண்ட் ஆப் ஆர்டர். நிதிநிலை அறிக்கை என்பது சட்டமன்றத்திலே மிக முக்கியமான ஒரு பகுதியாக இருப்பது. அதனுடைய தலையான டிபேட் நடக்கிறது. அதன் முதல்நாள் துவக்கம் இன்று. அந்த நிதிநிலை அறிக்கையிலேயே, அது தயாரிக்கப்பட்டதற்காக நன்றி தெரிவிக்கப்பட்டவர் நிதித்துறை செயலாளர் அவர்கள். ஆனால் நான் காலையிலிருந்து பார்க்கிறேன் நம்முடைய பைனான்ஸ் செக்ரட்டரி அவர்கள் இதுவரையில் இங்கே வரவேயில்லை. நான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களைக் கேட்க கடமைப்பட்டிருக்கிறேன், இந்த அவையை அவமதிக்க வேண்டும் என்று அதிகாரிகள் முடிவு எடுத்திருக்கிறார்களா? அவருடைய பெயரே இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் அவர் வரவில்லை வேறு யாரையோ அனுப்பியிருக்கிறார் ஒப்புக்கு. என்னால்

திருமணத்திற்கு வரமுடியவில்லை. எங்களுடைய வீட்டிலேயிருந்து என்னுடைய மகனை விருந்துக்கு அனுப்புகிறேன் என்று சொல்வது மாதிரி டிபார்ட்மெண்டிலே இருக்கும் யாரையோ அனுப்பியிருக்கிறார்கள் என்று சொன்னால், அதைவிட வேறு அவமரியாதை உண்டா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இதிலே அவமானம் ஒன்றும் இல்லை. எப்பொழுதும் நடக்கின்ற ஒன்றுதான் இது. நிதித்துறையைச் சேர்ந்த இணைச் செயலாளர், துணைச் செயலாளர் ஆகியவர்கள் வந்திருந்து குறிப்புகள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் குறிப்புகள் மீது எடுக்க வேண்டிய நடவடிக்கை பற்றிய விவரங்களோடு, நான் பதில் உரை அளிக்கும்போது, என்னென்ன விவரங்களை இங்கே சொல்லவேண்டுமோ அவைகளை தயார் செய்து அனுப்புவார்கள். யாராவது ஒருவர் வந்திருக்க வேண்டுமே தவிர, முதலிலிருந்து கடைசிவரையில் 8 நாட்களுக்கும் செயலாளர் வரவேண்டும் என்று வற்புறுத்துவது சரியல்ல. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் ஆட்சியில் இருந்தபோதும் இந்த நிலைமை இருந்தது. குறிப்பிட்ட சில நேரங்களில் தேவையானால் வருவார்களே தவிர, எல்லா நாட்களும் அவர் வரவேண்டும் என்று சொல்வது சரியல்ல. அதிலே ஒன்றும் தவறும் இல்லை. நிதித்துறையின் இணைச்செயலாளரும், துணைச் செயலாளரும் இங்கே வந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

6. வரவு-செலவுத் திட்டம் 1983-84 பொது விவாதம்—தொடர்ச்சி.

திரு. கு. ரமணி : ஆகவே, அந்தப் பத்திரிக்கையின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும்படியான சட்டத்தை தமிழக அரசு உடனடியாக வாபஸ் வாங்க வேண்டும். அந்த விஷயத்தை நமது நிதியமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கைக்குப் பதில் அளிக்கின்ற நேரத்தில் குறிப்பிட்டுச் சொல்வார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். அந்த நிதி நிலை அறிக்கையினைப் பற்றி பலவிதமான கருத்துக்கள் சொல்லப்பட்டு உள்ளது.

இந்திய நாட்டில் வறட்சி என்பது தமிழகத்தில் மட்டும் அல்ல, நாடு முழுவதற்கும், இந்த வறட்சி ஏற்பட்டுள்ளது. இதனால் தமிழகத்தின் வறட்சி முக்கியத்துவம் வாய்ந்தது அல்ல என்பது அல்ல. மின் வெட்டு இந்த நாடு முழுவதும் ஏற்பட்டுள்ளது. இதனால் தமிழகத்தில் உள்ள மின் வெட்டை அனுமதிக்கிறோம் என்பது அல்ல. இதுபோன்ற பயங்கரமான ஒரு பொருளாதார நெருக்கடி பல ஆண்டுகளாக இந்திய நாட்டைக் கவ்விக் கொண்டு, அதிலே நின்று ஊசலாடிக் கொண்டு, உறுதியான கொள்கையை நிறைவேற்றுவதற்கு முடியாமல் தவித்துக் கொண்டும் இருக்கிறது